முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.5.2025) முகாம் அலுவலகத்தில், ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சியில் 11.02.2025 அன்று நடைபெற்ற காவல்துறையினருக்கான 68வது தேசிய அளவிலான திறனாய்வு போட்டியில் (Police Videography Competition) தமிழ்நாடு காவல்துறை சார்பில் கலந்து கொண்டு முதலிடம் பிடித்து, தங்கப்பதக்கம் வென்ற உள்வட்ட பாதுகாப்பு பிரிவு தலைமைக் காவலர் டி.பாஸ்கரன் மற்றும் சென்னை, ஒத்திவாக்கத்தில் 17.03.2025 முதல் 22.03.2025 வரை நடைபெற்ற அகில இந்திய காவல்துறையினருக்கான 25வது துப்பாக்கி சுடும் போட்டியில் (Pistol Squatting Position Distance) 15 Yards பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற உள்வட்ட பாதுகாப்பு பிரிவு காவலர் ப. சுந்தரபாண்டி ஆகியோர் சந்தித்து, பதக்கங்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

ஆத்தூர் தொகுதியில்

பத்தாம் வகுப்பு தேர்வில் முதலிடம் பிடித்த மாணவிக்கு பாராட்டு!

அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்தினார்!

திண்டுக்கல், மே 22-

பெண் பிள்ளைகளுக்கு கல்வி தான் சொத்து உயர்கல்வி வரை கற்க வைக்க வேண்டும் என பெற்றோர்களுக்கு அமைச்சர் இ.பெரியசாமி கோரிக்கை விடுத்ததோடு ஆத்தூர் தொகுதியில் பத்தாம் வகுப்பு தேர்வில் 500க்கு 491 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்த சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி சசிரேகாவை பாராட்டி வாழ்த்தினார்

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு பள்ளி மற்றும் கல்லூரி சேர்க்கைக்காக கோரிக்கை மனு கொடுத்த தற்கு உடனடியாக தீர்வு வழங்கியதோடு உயர்கல்வி கற்க வேண்டுமென வாழ்த்தினார். அப்போது ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீவல்சரகு ஊராட்சியைச் சேர்ந்த தி.மு.க. பொறுப்பாளர் விஜயகுமார் அவர்களின் மகள் சின்னாள பட்டியில் உள்ள சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் படித்து வருகிறார். பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 500க்கு 491 மதிப்பெண்கள் பெற்று ஆத்தூர் தொகுதியில் உள்ள பள்ளிகளில் முதலிடம் பெற்றார். அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து வாழ்த்து பெற வந்த சசிரேகாவை அமைச்சர் ஐ.பெரியசாமி பாராட்டி வாழ்த்தியதோடு பெண்கள் தான் சாதனை படைத்து வருகின்றனர். பெற்றோர்கள் பெண் பிள்ளைகள் உயர்கல்வி கற்க வைக்க வேண்டும் என்ற தோடு பெண்களுக்கு கல்வி தான் நிரந்தர சொத்து எனக் கூறி மாணவி சசிரேகாவை வாழ்த்தியதோடு 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் இன்னும் சிறப்பாக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்றார். அதன்பின்னர் தொடர்ச்சியாக பள்ளி மற்றும் கல்லூரி சேர்க்கைக்காக கோரிக்கை மனு கொடுத்த ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து பெற்று தீர்வு வழங்கினார். அதன்பின்னர் திண்டுக்கல் ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை தனது பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். நிகழ்ச்சியின் போது கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணிஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் சூசை ராபார்ட், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல்முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், கலைராஜன், இல.கண்ணன், முருகானந்தம், ரேகா அய்யப்பன், உட்பட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

சென்னை மண்டலத்தைச் சேர்ந்த 33 சட்டமன்றத் தொகுதிகளின் தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை மண்டலக் கழகப் பொறுப்பாளர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ உள்ளிட்ட தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

முதலமைச்சரின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம் - மக்களைத் தேடி மருத்துவம்!

தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - அமெரிக்காவில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் தலைமை உரை!

லாஸ் ஏஞ்சல்ஸ், மே 22-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (20.05.2025) அமெரிக்கா-கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் 'நாள்தோறும் மேற்கொள்ளப்படும் நடைபயிற்சியால், உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படும் தாக்கம்' குறித்த தலைப்பில் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

2004-ஆம் ஆண்டு நிகழ்வுற்ற ஒரு மிகப்பெரிய சாலை விபத்தில் கால்மூட்டு நான்கு ஐந்து துண்டுகளாக உடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சையென மூன்று மாதங்களாக படுத்த படுக்கையாக இருக்க வேண்டிய ஒரு எதிர்பாராத சூழ்நிலை எனக்கு நேரிட்டது. நிலைகுலைந்த அத்தகைய ஓர் சூழலில் இனி மேல் தொடர்ந்து தரையில் உட்காரவோ, நடக்கவோ அல்லது ஓடவோ கூடாது என்ற மருத்துவர்களின் அறிவுரை ஒரு பேரிடியாக வந்தாலும் தன்னம்பிக்கையை கைவிடாது ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் படிப்படியாக யோகா பயிற்சி, மெதுவாக நடத்தல், சிறிய தூரங்கள் ஓடுதல் என முயற்சிக்கத்

தொடங்கி ஓட்டப்பயிற்சி அளவிற்கு உயர்ந்து மாரத்தான் பந்தயத்தில் பங்கேற்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டேன். அதைத் தொடர்ந்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100 மாரத்தான் பந்தயங்களில் பங்கேற்று உலக சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெற்றதோடு விடாமுயற்சி மற்றும் சளைக்காத மனவுறுதியுடன் இதுவரை 160 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். வரும் 24.05.2025 அன்று 161-வது மாரத்தான் போட்டி அமெரிக்கா-கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சன்னிடேல் என்கின்ற இடத்தில் கலந்து கொள்ள உள்ளேன்.

மாராத்தான் நிதி மக்கள் பணிக்கு

தமிழ்நாடு அரசால் 2020 மற்றும் 2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 'கலைஞர் நினைவு பன்னாட்டு மெய்நிகர் மாரத்தான்கள்', 2022-ஆம் வருடம் நடைபெற்ற 'கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்' மற்றும் 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற கின்னஸ் உலகசாதனை படைத்த 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்' ஆகியவற்றில் முன்னிலை வகுத்து பங்கேற்றதுடன், இந்நிகழ்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத்தொகையான ரூபாய் 5.43 கோடியை கொரோனா நோய்த்தடுப்பு நிவாரண நிதி, எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய்சேய் நல மருத்துவமனையில் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்குவதற்கான 4 மாடி கொண்ட உறைவிட கட்டடம் மற்றும் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான உயர் சிகிச்சைக்கான கட்டடம் போன்ற பல்வேறு உயர் நோக்கங்களுக்காக நன்கொடையாக அளிக்கப்பட்டதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மக்களைத் தேடி மருத்துவம் - ஐநா விருது

மேலும், தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் எவ்வாறு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இந்திய அளவில் திகழ்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 05.08.2021-ல் தொடங்கப்பட்ட 'மக்களைத் தேடி மருத்தும் திட்டம்', ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2004-ஆம் ஆண்டிற்கான United Nation Interagency Task Force Award பெற்றுள்ளதையும், 'பாதம் பாதுகாப்போம் திட்டம்', 'இதயம் காப்போம் திட்டம்', 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும்-48' போன்ற பிற பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தன்னம்பிக்கை எத்தகைய பலம் வாய்ந்தது என்பதற்கு இலக்கணமாக மயிரிழையில் உயிர்தப்பி இனி முன்பு போல இயங்கவியலாது என்ற நிலையிலிருந்து மனவுறுதி, விடாமுயற்சி மற்றும் தொடர் பயிற்சி காரணமாக மாரத்தான் ஓட்டத்தில் உலக சாதனைகள் புரிந்து இன்று சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கும், வருங்காலத் தலைமுறையினருக்கும் தினசரி நடைபயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சி மூலம் உடல் மற்றும் மனநலம் காக்கப்படுவதை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நல்வாய்ப்பாக இப்பயணம் அமைந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.